www.tnpscquestionpapers.com

# TNPSC – VAO கிராம நிர்வாக அலுவலர் தேர்வு 2007 (10.06.2007) வருட தேர்வு வினாத்தாள் பொது அறிவு - பொதுத்தமிழ்

நேரம் : 3 மணி                                                         மதிப்பெண் : 300

1. இரு மின்னூட்டங்களுக்கு இடைப்பட்ட விசையானது கீழ்க்கண்டவற்றில் எதற்கு நேர்த்தகவில் உள்ளது?
A) r  B) $r^{-1}$  C) $r^2$  D) $r^{-2}$

2. ஒரு மெல்லிய லென்சின் குவியத் தொலைவு 25 செ.மீ. ஆனால் அதன் திறன்
A) 4D  B) 0.04 D  C) 0.4D  D) 2.5 D

3. அழுத்தம் அதிகரிப்பதால் ஒரு திரவத்தின் கொதிநிலை
A) குறையும்
B) அதிகரிக்கும்
C) முதலில் அதிகரிக்கும், பிறகு குறையும்
D) முதலில் குறைந்து பிறகு அதிகரிக்கும்

4. பின்வரும் அணுக்கரு வினையில் வெளிப்படும் ஆற்றல் Q-யின் மதிப்பு A(1.002amu)+B(1.005 amu) →C(1.001 amu)+D(1.003 amu)+Q
A) 2.793 MeV  B) 0.931 MeV
C) 0.310 MeV  D) 1.862 MeV

5. எறிபொருளின் பறக்கும் காலம் $t_f$ என்பது
A) $\frac{2u\sin\theta}{g}$  B) $\frac{u^2\sin^2\theta}{2g}$
C) $\frac{u\sin\theta}{g}$  D) $\frac{u^2\sin 2\theta}{g}$

6. கார்பாக்ஸிலிக் அமிலத்தின் முக்கிய வினைச்செயல் தொகுதி
A) –COOH  B) $-COOCH_3$
C) –OH  D) –CHO

7. சிமெண்ட் கட்டிகள் (திறன்கள்) என்பது எந்தெந்த பொருட்களின் கலவை
A) கால்சியம் சல்பேட், கால்சியம் சிலிகேட், டிரை கால்சியம் அலுமினேட்
B) டை கால்சியம் சிலிகேட், டிரை கால்சியம் அலுமினேட்
C) டை கால்சியம் சிலிகேட், டிரை கால்சியம் சிலிகேட்
D) டை கால்சியம் சிலிகேட், டிரை கால்சியம் சிலிகேட், டிரை கால்சியம் அலுமினேட்

8. கீழ்வரும் அமிலங்களில் எது சிகப்பு எறும்பின் கொடுக்கில் உள்ளது?
A) லாக்டிக் அமிலம்  B) ப்யூட்ரிக் அமிலம்
C) அசிட்டிக் அமிலம்  D) பார்மிக் அமிலம்

9. 40% பார்மால்டிஹைடு என்பது எவ்வாறு அழைக்கப்படுகிறது?
A) பார்மிக்கா  B) பார்மலின்
C) பார்மிக் அமிலம்  D) ஆல்டிஹைடு

10. நியூட்ரானைக் கண்டறிந்தவர் யார்?
A) ருதர்ஃபோர்டு  B) கோல்ட்ஸ்டீன்
C) போர்–பரி  D) சாட்விக்

11. தமக்கு வேண்டிய உணவைத் தானே தயாரித்துக் கொள்ளும் பாக்டீரியங்கள்
A) தற்சார்பு பாக்டீரியங்கள்
B) பிறசார்பு பாக்டீரியங்கள்
C) ஒட்டுண்ணி பாக்டீரியங்கள்
D) சாறுண்ணிகள்

12. ஜீன் என்பது
A) பரம்பரைக் காரணி
B) இளமையைக் காக்கும் மருந்து
C) மிகச் சிறிய உயிரினம்
D) ஓர் விதை

13. செல்லின் ஆற்றல் நிலையம் எனக் கருதப்படுவது
A) மைட்டோகாண்ட்ரியா
B) கோல்கை உறுப்புகள்
C) எண்டோபிளாஸ்மிக் வலை
D) பசுங்கணியம்

14. கீழ் உள்ளவற்றில் எவை தாவரங்களின் சுவாச உறுப்பு?
A) பூக்கள்  B) இலை
C) வேர்  D) எதுவும் இல்லை

15. காளானின் குடை போன்ற விரிந்த பகுதி
A) நுண்தட்டு  B) ஆனுலஸ்
C) ஸ்டைப்  D) பைலியஸ்

16. பரவும் தன்மையற்ற நோய் எது?
A) காலரா  B) மலேரியா
C) கரோனரி இதயநோய்  D) எய்ட்ஸ்

17. இரத்தத்தட்டுகள் எவ்விதத்தில் உதவுகின்றன?
A) நோய் எதிர்ப்புத் தன்மை  B) வாயு பரிமாற்றம்
C) இரத்தம் உறைதல்  D) அமில கார சமன்பாடு

1 .... D  2 .... A  3 .... B  4 ..... A  5 ..... A  6 ..... A  7 .... D  8 .... D  9 .... B  10 ... D  11 ..... A  12 ..... A
13 .... A  14 .... B  15 .... D  16 ..... C  17 ..... C

www.tnpscquestionpapers.com

18. பிலேரியாஸிஸ் நோய் உருவாக காரணமான காரணி
A) வைரஸ்
B) பாக்டீரியா
C) ஊச்சரேரியா பாங்கராப்டி
D) பிளாஸ்மோடியம்

19. பாலூட்டியின் உதரவிதானம் எந்த மண்டலத்துடன் தொடர்புடையது?
A) நரம்பு மண்டலம் B) கழிவு நீக்க மண்டலம்
C) ஜீரண மண்டலம் D) சுவாச மண்டலம்

20. ஒலியை அளவிடும் அலகு
A) ஆம்பியர் B) டெசிபல்
C) ஒளி ஆண்டு D) பாஸ்கல்

21. மகாவீரர் பிறந்த இடம்
A) பாடலிபுத்திரம் B) வைசாலி
C) லும்பினி D) சாரநாத்

22. அசோகர் கலிங்கத்தை வென்ற ஆண்டு
A) கி.பி. 74 B) கி.மு. 261
C) கி.மு. 326 D) கி.மு. 323

23. இரண்டாம் புலிகேசியைத் தோற்கடித்தவர்
A) முதலாம் நரசிம்ம வர்மன்
B) முதலாம் மகேந்திர வர்மன்
C) சிம்மவிஷ்ணு
D) இவர்களில் ஒருவருமில்லை

24. 1976 இல் கொத்தடிமை முறையை ஒழித்த பிரதமர்
A) ஜவஹர்லால் நேரு B) இந்திரா காந்தி
C) இராஜீவ் காந்தி D) லால் பகதூர் சாஸ்திரி

25. வரதட்சணைத் தடைச்சட்டம் கொண்டு வரப்பட்ட ஆண்டு
A) கி.பி. 1971 B) கி.பி. 1961
C) கி.பி. 1981 D) கி.பி. 1969

26. கீழ்க்கண்டவற்றில் எது சரியாக பொருந்துகிறது?
A) ஒழுங்குமுறைச் சட்டம் – இராபர்ட் கிளைவ்
B) துணைப்படைத் திட்டம் – வெல்லெஸ்லி பிரபு
C) வாரிசு இழப்புக் கொள்கை – வாரன் ஹேஸ்டிங்ஸ்
D) இரட்டை ஆட்சி – டல்ஹௌசி பிரபு

27. ரிப்பன் பிரபு மிகச் சிறந்த அரசப்பிரதிநிதியாகக் கருதப்படக் காரணம்
A) அவர் பத்திரிகை சுதந்திரத்திற்கு மதிப்பளித்தார்
B) தல சுய ஆட்சி நிறுவனங்களுக்கு அடிக்கல் நாட்டினார்
C) சிறார்கள் தொழிற்சாலையில் பணியமர்த்துதலைத் தடை செய்தார்
D) அவர் அரசப் பிரதிநிதியாக இருந்த போது இந்திய மக்கள் தொகையின் முழுக் கணக்கெடுப்பு நடைபெற்றது.

28. ஜாவா, சுமத்திரா ஆகியவற்றை வெற்றி கொண்ட இந்திய அரசர்
A) முதலாம் இராஜேந்திர சோழன்
B) முதலாம் இராஜராஜ சோழன்
C) குலோத்துங்க சோழன்
D) முதலாம் பராந்தகன்

29. கிராம நிர்வாகத்திற்கு அதிக அதிகாரம் கிடைத்த ஆட்சிக் காலம்
A) சோழர்கள் B) முகலாயர்கள்
C) பாலர்கள் D) ஆங்கிலேயர்கள்

30. முடத்திருமாறன் மதுரை நகரை உருவாக்கிய ஆற்றின் கரை
A) காவேரி B) வைகை
C) பாலாறு D) தாமிரபரணி

31. தமிழ்நாட்டில் காணப்படும் மொத்த மாவட்டங்கள்
A) 29 B) 28 C) 26 D) 30
*குறிப்பு* : 2008 முதல் 32 மாவட்டங்கள்.

32. கரிசல் மண் பின்வரும் பயிருக்கு மிக பொருத்தமானது
A) நெல் B) கரும்பு
C) பருத்தி D) கோதுமை

33. இந்தியாவின் குறுக்காக செல்லும் சிறப்பு அட்ச ரேகை
A) கடகரேகை B) மகரரேகை
C) புவி நடுக்கோடு D) துருவ வட்டம்

34. நிலக்கடலை உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் மாநிலம்
A) குஜராத் B) ஒரிசா
C) ஆந்திரப் பிரதேசம் D) இராஜஸ்தான்

35. $23\frac{1}{2}^\circ$ தெ அட்சரேகை இதைக் குறிக்கின்றது
A) மகரரேகை B) கடகரேகை
C) பூமத்தியரேகை D) துருவங்கள்

36. பருப்பு வகைகள் அதிகமாக பயிரிடும் மாநிலம்
A) தமிழ்நாடு B) கேரளா
C) இராஜஸ்தான் D) மத்தியப் பிரதேசம்

37. அதிக அளவில் செம்மண் இங்கு காணப்படுகிறது
A) மத்தியப் பிரதேசம் B) குஜராத்
C) மகாராஷ்டிரம் D) தமிழ்நாடு

38. 'ஹரித்வார்' எந்த ஆற்றின் கரையோரமாக அமைந்து காணப்படுகிறது?
A) யமுனா B) பிரம்மபுத்ரா C) கங்கை D) மகாநதி

39. அடர்ந்த காடுகள் எந்த மாநிலத்தில் அதிகமாக காணப்படுகிறது?
A) அருணாச்சலப் பிரதேசம் B) அஸ்ஸாம்
C) மத்தியப் பிரதேசம் D) மேற்கு வங்காளம்

40. அதிக மழை பெறும் மாநிலம்
A) அஸ்ஸாம் B) இராஜஸ்தான்
C) மேற்கு வங்காளம் D) உத்திரப் பிரதேசம்

41. இந்தியாவின் கிராமங்கள் நமது நாட்டின் பின்வரும் ஒன்றின் முதுகெலும்பு
A) பொருளாதாரம் B) பண்பாடு
C) உணவு D) நாட்டியம்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 18 .... C | 19 .... D | 20 .... B | 21 ..... B | 22 ..... B | 23 ..... A | 24 ..... B | 25 ..... B | 26 .... B | 27 ... B | 28 ..... A | 29 ..... A |
| 30 .... B | 31 .... D | 32 .... C | 33 ..... A | 34 ..... A | 35 ..... A | 36 .... D | 37 .... D | 38 .... C | 39 ... B | 40 ..... A | 41 ..... A |

www.tnpscquestionpapers.com

www.tnpscquestionpapers.com

42. தற்காலிகமாக பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் முறை
A) கூலியை உயர்த்துதல்
B) பண அளிப்பைக் குறைத்தல்
C) வரியைக் குறைத்தல்
D) இவற்றில் எதுவுமில்லை

43. வீட்டு வசதியினை மேம்படுத்த உதவும் நிறுவனம்
A) மாநில வீட்டு வசதி வாரியம்
B) குடிசை மாற்று வாரியம்
C) மத்திய அரசு வீட்டு வசதி வாரியம்
D) இவை மூன்றும்

44. கீழ்வரும் எந்த மாநில மக்கள்தொகையில் பெண்களின் விகிதாச்சாரம் அதிகமாக உள்ளது?
A) தமிழ்நாடு B) கேரளா
C) பீகார் D) மேற்கு வங்காளம்

45. 'உலகின் சர்க்கரைக் கிண்ணம்' என அழைக்கப்படும் நாடு
A) கியூபா B) இந்தியா
C) பிரேசில் D) கனடா

46. "என்ட்ரிபோட்" வாணிகம் என்பது
A) ஏற்றுமதி வாணிகம் B) இறக்குமதி வாணிகம்
C) மறு–ஏற்றுமதி வாணிகம் D) பன்னாட்டு வாணிகம்

47. இந்தியாவின் மான்செஸ்டர் மற்றும் தென் இந்தியாவின் மான்செஸ்டர் யாவை?
A) டில்லி மற்றும் சென்னை
B) கொல்கத்தா மற்றும் சென்னை
C) பெங்களூர் மற்றும் கோயம்புத்தூர்
D) மும்பை மற்றும் கோயம்புத்தூர்

48. ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியா எப்போது தேசியமயமாக்கப் பட்டது?
A) 1949 B) 1955 C) 1969 D) 1980

49. 2001–ம் ஆண்டின் மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, இந்தியாவின் மக்கள்தொகை
A) 0.01027 பில்லியன் B) 0.1027 பில்லியன்
C) 1.027 பில்லியன் D) 10.27 பில்லியன்

50. சார்க் (SAARC) அமைப்பின் தலைமையிடம்
A) டாக்கா B) காத்மண்டு
C) மாலே D) புது டில்லி

51. மக்களாட்சி என்பதற்கு பொருத்தமான விளக்கம் கூறியவர்
A) வாஷிங்டன் B) ஆபிரகாம் லிங்கன்
C) கென்னடி D) உட்ரோ வில்சன்

52. கடற்படையின் தலைமை அலுவலர்
A) கமாண்டர் B) மேஜர்
C) அட்மிரல் D) ஏர்சீப் மார்ஷல்

53. கல்பனா சாவ்லா இதனோடு தொடர்புடையவர்
A) பொருளாதாரம் B) விண்வெளிப் பயணம்
C) அறிவியல் D) அணு ஆராய்ச்சி

54. பல கட்சி ஆட்சி நடைபெறும் நாட்டிற்கு ஓர் உதாரணம்
A) இங்கிலாந்து
B) அமெரிக்க ஐக்கிய நாடுகள்
C) இந்தியா
D) ஆஸ்திரேலியா

55. இதன் அடிப்படையில் இந்திய மாநிலங்கள் பிரிக்கப்பட்டுள்ளன.
A) மொழி B) இலக்கியங்கள்
C) பாரம்பரியம் D) கட்டடக்கலை

56. இந்தியாவின் மிக உயர்ந்த நீதித்துறை அங்கம்
A) மாவட்ட நீதிமன்றம் B) உயர் நீதிமன்றம்
C) நடுவர் நீதிமன்றம் D) உச்ச நீதிமன்றம்

57. ஒரு நற்குடிமகன்/நற்குடிமகள் பெற்றிருக்க வேண்டியது
A) தேசபக்தி B) நற்கல்வி
C) சகிப்புத்தன்மை D) இவை அனைத்தும்

58. குடியரசு தினம் கடைப்பிடிக்கப்படும் நாள்
A) டிசம்பர், 26 B) பிப்ரவரி, 26
C) ஜனவரி, 26 D) நவம்பர், 26

59. மையப் பட்டியலில் உள்ள துறைகள்
A) 97 துறைகள் B) 94 துறைகள்
C) 96 துறைகள் D) 95 துறைகள்

60. பட்ஜெட் என்பது எம்மொழிச் சொல்?
A) இலத்தீன் B) பிரெஞ்சு
C) கிரேக்கம் D) ஆங்கிலம்

61. பட்டியல் I ஐ பட்டியல் II உடன் பொருத்தி, கீழே கொடுக்கப் பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான பதிலைத் தேர்ந்தெடு:

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| a) தனிநபர் அறப்போர் | 1. 1927 |
| b) சைமன் குழு | 2. 1942 |
| c) கிரிப்ஸ் தூதுக்குழு | 3. 1940 |
| d) சட்ட மறுப்பு இயக்கம் | 4. 1930 |

குறியீடுகள்:

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 3 | 1 | 2 | 4 |
| B) | 2 | 3 | 4 | 1 |
| C) | 1 | 3 | 4 | 2 |
| D) | 4 | 2 | 3 | 1 |

62. கி.பி. 1917 இல் நடைபெற்ற சம்பரன் அறப்போரில் கலந்து கொண்டவர் யார்?
A) பால கங்காதர திலகர்
B) கோபாலகிருஷ்ண கோகலே
C) தாதாபாய் நௌரோஜி
D) மகாத்மா காந்தி

63. சுயராஜ்யக் கட்சியின் முக்கியத் தலைவர்கள்
A) ஜே. பட்டேல், டாக்டர் அன்சாரி
B) எம். என். ராய், முசாஃபர் அகமது
C) மோத்திலால் நேரு, சி. ஆர். தாஸ்
D) பி. ஆர். அம்பேத்கார், பி. சி. ஜோஷி

42 .... B 43 .... D 44 .... B 45 ..... A 46 ..... C 47 .... D 48 ..... A 49 ..... C 50 .... B 51 ... B 52 ..... C 53 ..... B
54 .... C 55 .... A 56 .... D 57 ..... D 58 ..... C 59 ..... A 60 ..... B 61 ..... A 62 ... D 63 ... C

www.tnpscquestionpapers.com

www.tnpscquestionpapers.com

64. கி.பி. 1929 ஆம் ஆண்டு லாகூர் காங்கிரஸ் மாநாட்டிற்குத் தலைமை ஏற்றவர் யார்?
A) மகாத்மா காந்தி
B) ஜவஹர்லால் நேரு
C) டாக்டர் பி. ஆர். அம்பேத்கார்
D) மோத்திலால் நேரு

65. ரௌலட் சட்டம் கொண்டு வந்தபோது அரசப்பிரதிநிதியாக இருந்தவர்
A) மின்டோ
B) செம்ஸ்போர்டு
C) ஹார்டின்ஜ் II
D) இவர்களில் ஒருவரும் இல்லை

66. கி.பி. 1946 இல் அமைச்சரவை தூதுக்குழுவை இந்தியாவிற்கு அனுப்பிய இங்கிலாந்தின் பிரதம அமைச்சரைக் குறிப்பிடு.
A) சர்ச்சில்
B) அட்லி
C) மௌண்ட்பேட்டன்
D) இவர்களில் ஒருவரும் இல்லை

67. கீழ்க்காண்பவர்களில் யார் தீவிரவாதி இல்லை?
A) பாலகங்காதர திலகர்
B) அரவிந்த கோஷ்
C) வ.உ. சிதம்பரம் பிள்ளை
D) சுரேந்திரநாத் பானர்ஜி

68. தமிழ்நாட்டிலுள்ள வேதாரண்யத்தில் சட்டத்தை மீறி உப்பு எடுத்தவர் யார்?
A) குமரன்
B) இராஜாஜி
C) ஈ.வெ. இராமசாமி
D) இவர்களில் ஒருவரும் இல்லை

69. இராபர்ட் வில்லியம் டி.இ. ஆஷ்ஷை வாஞ்சிநாதன் சுட்டுக்கொன்ற இடம்
A) தர்மபுரி B) ஈரோடு
C) திருப்பூர் D) மணியாச்சி

70. சுதேசி நீராவிக் கப்பல் என்ற நிறுவனம் தூத்துக்குடியில் யாரால் ஆரம்பிக்கப்பட்டது?
A) திருப்பூர் குமரன் B) காமராசர்
C) வ.உ. சிதம்பரம் பிள்ளை D) வாஞ்சிநாதன்

71. புற ஊதாக்கதிர்களால் ஏற்படும் புற்றுநோய்
A) தோல் புற்றுநோய் B) இரத்த புற்றுநோய்
C) நுரையீரல் புற்றுநோய் D) எலும்பு புற்றுநோய்

72. அதிக அளவில் மழை பெய்த இடம்
A) மும்பை (2005) B) சிரபுஞ்சி (1910)
C) சிட்னி (1946) D) இந்தோனேஷியா (1974)

73. ஒரு திடப்பொருள் நேரடியாக வாயுநிலைக்கு மாற்றப்படும் நிகழ்ச்சி
A) பதங்கமாதல் B) திடநிலைக்கு மாற்றுதல்
C) ஆவியாக்குதல் D) ஆவியாதல்

74. தேசிய அறிவியல் தினமாக கொண்டாடப்படும் நாள்
A) பிப்ரவரி, 8 B) பிப்ரவரி, 18
C) பிப்ரவரி, 28 D) மார்ச், 8

75. ஹீமோபீலியா என்ற நோய் மனிதரில் எவ்வாறு ஏற்படுகிறது?
A) பாக்டீரியல் தொற்றினால்
B) பூஞ்சைகளின் தொற்றினால்
C) திடீர் மாற்றமடைந்த ஜீனினால்
D) வைரஸ் தொற்றினால்

76. பட்டுப் புழு உணவாக உண்ணுவது
A) கறிவேப்பிலை B) மா இலை
C) கொத்தமல்லி இலை D) மல்பெரி இலை

77. செரிகல்சர் என்பது
A) பட்டுப்பூச்சி வளர்த்தல் B) மீன் வளர்த்தல்
C) செடிகள் வளர்த்தல் D) தேனீ வளர்த்தல்

78. பண்ணை விலங்குகளின் முட்டை உற்பத்தியை அதிகரிக்கும் முயற்சி
A) நீலப் புரட்சி B) வெள்ளிப் புரட்சி
C) தங்கப் புரட்சி D) வெள்ளைப் புரட்சி

79. பட்டியல் I ஐ பட்டியல் II உடன் பொருத்தி, கீழே கொடுக்கப் பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான பதிலைத் தேர்ந்தெடு:

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| a) சித்தரஞ்சன் | 1. உரத் தொழிற்சாலை |
| b) தாராபூர் | 2. இரயில் என்ஜின் தொழிற்சாலை |
| c) சிந்திரி | 3. தீப்பெட்டி தொழிற்சாலை |
| d) சிவகாசி | 4. அணுமின் நிலையம் |

குறியீடுகள்:

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 2 | 4 | 1 | 3 |
| B) | 4 | 1 | 3 | 2 |
| C) | 2 | 1 | 4 | 3 |
| D) | 1 | 3 | 2 | 4 |

80. அஸ்ஸாம் மாநிலத்தின் தலைநகர்
A) ஷில்லாங் B) இம்பால்
C) கௌஹாத்தி D) திஸ்பூர்

81. 1950–ம் ஆண்டு முதல் நாடெங்கிலும் மரம் நடு விழா அல்லது 'வனமகா உற்சவம்'.........ஆகிய மாதங்களில் நடைபெற்று வருகின்றது.
A) ஜூலை – ஆகஸ்ட் B) மே – ஜூன்
C) மார்ச் – ஜூன் D) செப்டம்பர் – அக்டோபர்

82. இந்தியாவின் கோதுமைக் களஞ்சியம் என்றழைக்கப்படுவது
A) தமிழ்நாடு B) பஞ்சாப்
C) இராஜஸ்தான் D) மேற்கு வங்காளம்

83. தமிழ்நாட்டில் பெட்ரோலியம் கிடைக்கப்பெறும் டெல்டா பகுதி
A) தாமிரபரணி B) வைகை
C) காவேரி D) பாலாறு

64 .... B 65 .... B 66 .... B 67 ..... D 68 ..... B 69 .... D 70 ..... C 71 ..... A 72 .... A 73 ... A 74 ..... C 75 ..... C
76 .... D 77 .... A 78 .... B 79 ..... A 80 ..... D 81 ..... A 82 ..... B 83 ..... C

www.tnpscquestionpapers.com

www.tnpscquestionpapers.com

84. சூரியன் உதயமாகும் நாடு
A) நார்வே B) ஜப்பான்
C) வெனிஸ் D) இலண்டன்

85. தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள நெல் ஆராய்ச்சி மையம்
A) கும்பகோணம் B) தஞ்சாவூர்
C) ஆடுதுறை D) பாபநாசம்

86. ஏழு மலைகளின் நகரம்
A) ரோம் B) வியன்னா
C) காபூல் D) ஸ்ரீநகர்

87. தெற்காசிய பிராந்திய நாடுகளின் கூட்டமைப்பு (SAARC) மாநாடு முதன்முதலில் நடந்தது.
A) காத்மாண்டு B) கொழும்பு
C) புது டில்லி D) டாக்கா

88. ஹிந்தி மொழிக்கு அடுத்து மிகப் பெரிய அளவில் இந்தியாவில் உள்ள மொழி
A) பெங்காலி B) உருது
C) தெலுங்கு D) மராத்தி

89. இந்தியாவின் தேசிய விளையாட்டு
A) கபடி B) ஹாக்கி
C) கிரிக்கெட் D) கால்பந்து

90. தமிழகத்தில் கடைசியாக ஆரம்பிக்கப்பட்ட மாவட்டம் எது?
A) நீலகிரி B) கிருஷ்ணகிரி
C) விழுப்புரம் D) திருவாரூர்
*குறிப்பு :* 2008ல் திருப்பூர் மாவட்டம் உதயம்.

91. $a : b = 5 : 9, b : c = 4 : 7$ எனில், a : b : c –ன் மதிப்பு என்ன?
A) 5 : 9 : 7 B) 20 : 36 : 63
C) 10 : 18 : 14 D) 20 : 81 : 63

92. ஒரு வட்டத்தின் மையப்புள்ளியிலிருந்து, அதன் ஒரு நாணுக்கு வரையப்படும் செங்குத்துக் கோடு அதனை........சம பகுதிகளாகப் பிரிக்கும்.
A) 2 B) 3
C) 4 D) இவற்றில் எதுவும் இல்லை

93. ஒரு வட்ட நாற்கரத்தின் ஒரு கோணம் $70°$ எனில் அதன் எதிர்க் கோணம் என்ன?
A) 20° B) 110° C) 30° D) 120°

94. 20 மதிப்புகளின் திட்டவிலக்கம் மற்றும் சராசரி முறையே 21.2 மற்றும் 36.6 ஆகும். அவற்றின் மாறுபாட்டுக் கெழுவைக் காண்க.
A) 21.2 B) 36.6 C) 57.92 D) 1

95. $1 - \tan 45°$–ன் மதிப்பு யாது?
A) $1-\sqrt{3}$ B) $\sqrt{3}-1$ C) 0 D) 2

96. $y$–அச்சுக்கு இணையான நேர்க்கோட்டின் சமன்பாடு என்ன?
A) $x = 0$ B) $y = 0$ C) $x = c$ D) $y = c$

97. 21, 42, 63, .....என்ற கூட்டுத்தொடரில், 420 எத்தனையாவது உறுப்பு?
A) 21 B) 20 C) 42 D) 40

98. கொடுக்கப்பட்ட பின்னங்களில் பெரியது எது?
A) $\frac{2}{5}$ B) $\frac{3}{7}$ C) $\frac{4}{11}$ D) $\frac{3}{8}$

99. $2x+ky+1 = 0$ என்ற நேர்க்கோட்டின் மீது புள்ளி (1, 1) உள்ளது எனில், $k$–ன் மதிப்பு என்ன?
A) 3 B) –3 C) 2 D) –2

100. (–1, 2) மற்றும் (4, –5) ஆகிய இருபுள்ளிகளை சேர்க்கும் நேர்க்கோட்டுத் துண்டினை 2 : 3 என்ற விகிதத்தில் உட்புறமாக பிரிக்கும் புள்ளி
A) (–1, 4) B) (2, –5)
C) $\left(1, -\frac{4}{5}\right)$ D) $\left(-\frac{4}{5}, 1\right)$

101. பொருத்தமான பொருளைத் தேர்வு செய்க:
1. தொன்மை — அ. பல்லக்கு
2. வேய் — ஆ. உறவினர்
3. கிளைஞர் — இ. மூங்கில்
4. சிவிகை — ஈ. பழமை

குறியீடுகள்:

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | இ | ஈ | அ | ஆ |
| B) | ஈ | இ | ஆ | அ |
| C) | இ | ஆ | ஈ | அ |
| D) | ஈ | அ | இ | ஆ |

102. பொருத்தமான பொருளைத் தேர்வு செய்க:
1. தொழும்பர் — அ. உலகம்
2. பொருப்பு — ஆ. அரசன்
3. புவனம் — இ. மலை
4. வேந்தர் — ஈ. தொண்டர்

குறியீடுகள்:

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | ஈ | இ | ஆ | அ |
| B) | ஈ | இ | அ | ஆ |
| C) | இ | ஈ | அ | ஆ |
| D) | ஆ | இ | ஈ | அ |

103. பொருத்துக:
1. முப்பால் — அ. வியாசர்
2. தொல்காப்பியம் — ஆ. திருக்குறள்
3. மகா பாரதம் — இ. சிலப்பதிகாரம்
4. தமிழ் முதற்காப்பியம் — ஈ. தொல்காப்பியர்

குறியீடுகள்:

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | ஈ | ஆ | அ | இ |
| B) | ஆ | ஈ | அ | இ |
| C) | அ | ஆ | இ | ஈ |
| D) | இ | ஆ | ஈ | அ |

84 .... B 85 .... C 86 .... A 87 ..... D 88 ..... C 89 ..... B 90 ..... B 91 ..... B 92 .... A 93 ... B 94 ..... C 95 ..... C
96 .... C 97 .... B 98 .... B 99 ..... B 100 ..... C 101 ..... B 102 ..... B 103 ..... B

www.tnpscquestionpapers.com

www.tnpscquestionpapers.com

104. பொருத்துக:

| நூல் | நூலாசிரியர் |
|---|---|
| 1. திருவந்தாதி | அ. நல்லாதனார் |
| 2. எழிலோவியம் | ஆ. கண்ணதாசன் |
| 3. திரிகடுகம் | இ. நம்பியாண்டார் நம்பி |
| 4. இயேசு காவியம் | ஈ. வாணிதாசன் |

குறியீடுகள்:

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | ஈ | இ | அ | ஆ |
| B) | அ | ஆ | இ | ஈ |
| C) | ஆ | அ | இ | ஈ |
| D) | இ | ஈ | அ | ஆ |

105. பொருத்துக:

| சொல் | பொருள் |
|---|---|
| 1. நொய்மை | அ. தீராப்பகை |
| 2. தொய்வு | ஆ. கேடு |
| 3. வன்மம் | இ. மென்மை |
| 4. நலிவு | ஈ. இளைப்பு |

குறியீடுகள்:

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | அ | இ | ஈ | ஆ |
| B) | ஆ | அ | ஈ | இ |
| C) | இ | ஈ | அ | ஆ |
| D) | ஈ | ஆ | அ | இ |

106. "நீடு துயில் நீக்கப் பாடி வந்த நிலா" –இத்தொடரால் குறிக்கப்படும் சான்றோர்
A) பாரதியார் B) பாரதிதாசன்
C) கண்ணதாசன் D) சுரதா

107. "பாட்டுக்கொரு புலவன்" –இத்தொடரால் குறிக்கப்பெறும் சான்றோர்
A) பாரதிதாசன் B) கவிமணி
C) பாரதியார் D) இராமலிங்கம் பிள்ளை

108. "தமிழ்த்தாத்தா" என்ற தொடரால் குறிக்கப்பெறும் சான்றோர்
A) திரு.வி.க. B) உ.வே.சா.
C) பாரதியார் D) கவிமணி

109. "வாயுறை வாழ்த்து" என்று அழைக்கப்படும் நூல்
A) சிலப்பதிகாரம் B) நளவெண்பா
C) திருக்குறள் D) அகநானூறு

110. "தமக்கென முயலா நோன்றாள்" –இத்தொடர் குறிப்பது
A) கம்பராமாயணம் B) பெரிய புராணம்
C) சீவக சிந்தாமணி D) புறநானூறு

111. "கரை மீதேறி" –பிரித்தெழுதுக:
A) கரை+மீதேறி B) கறை+மீதேறி
C) கரை+மீது+ஏறி D) கரைமீது+ஏறி

112. "நண்ணுவதில்லை" –பிரித்து எழுதுக:
A) நண்ணு+வதில்லை B) நண்ணுவது+இல்லை
C) நாணு+இல்லை D) நன்னு+இல்லை

113. 'புறநானூறு'–பிரித்து எழுதுக:
A) புறமை+நானூறு B) புறம்+நான்கு+நூறு
C) புறம்+நானூறு D) புற+நான்கு+நூறு

114. 'மழைக்காலம்' –பிரித்து எழுதுக:
A) மழைக்கா+லம் B) மழைக்+காலம்
C) மழை+காலம் D) ம+ழைக்காலம்

115. "நாலடியார்" –பிரித்தெழுதுக:
A) நால்+அடியார் B) நான்கு+அடியார்
C) நா+அடியார் D) நான்+அடியார்

116. 'வடமலை' –எதிர்ச்சொல் தருக:
A) கிழக்கு மலை B) மேற்கு மலை
C) கயிலை மலை D) தென்மலை

117. 'அசைதல்' –எதிர்ச்சொல் தருக:
A) நிற்றல் B) அலைதல் C) பறித்தல்
D) ஓடுதல்

118. "செல்வீர்" –எதிர்ச்சொல் தருக:
A) செல்லா B) செல்லு C) செல்லாதீர் D) செல்லுக

119. "பகைவன்" –எதிர்ச்சொல் தருக:
A) நல்லவன் B) நண்பன் C) எதிரி D) வல்லவன்

120. 'பெருமை' –எதிர்ச்சொல் தருக:
A) உண்மை B) சிறுமை C) வண்மை D) பொய்மை

121. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக:
A) செம்மை B) வெண்மைC) பசுமை D) மடமை

122. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக:
A) தென்னை B) பனை C) நெற்பயிர் D) ஆலமரம்

123. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக:
A) அப்பர் B) சுந்தரர்
C) மாணிக்கவாசகர் D) கடவுள்

124. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக:
A) பால காண்டம் B) சுந்தர காண்டம்
C) காட்சிப் படலம் D) அயோத்தியா காண்டம்

125. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக:
A) ஒட்டக்கூத்தர் B) கம்பர்
C) மகேந்திரவர்மன் D) புகழேந்தி

126. சந்திப் பிழை நீக்கிய சொல்லைத் தேர்க:
A) இந்த வீட்டை எப்படிக் கட்டினாய்?
B) இந்த வீட்டை எப்படி காட்டினாய்?
C) இந்த வீடு எப்படிக் காட்டினாய்?
D) இந்த வீட்டை எப்படிக் கூட்டினாய்?

127. ஒருமை–பன்மை பிழை நீக்கிய சொல்லை எழுதுக:
A) கார்க்கில் போரில் பல வீரர்கள் மடிந்தன
B) கார்கில் போரில் பல வீரர் மடிந்தது
C) கார்கில் போரில் பல வீரர் மடிந்தனர்
D) கார்க்கில் போரில் வீரர்கள் பலர் மடிந்தனர்

128. வழூஉச் சொல் திருத்தம் பெற்ற சொல்லைத் தேர்க:
A) தலகாணி B) சீயக்காய்
C) தாழ்ப்பால் D) கயிறு

104.... D 105.... C 106.... A 107..... C 108..... B 109 .....C 110 .... D 111 .....C 112 ....B 113 ...B 114..... C 115 ..... B
116.... D 117.... A 118.... C 119..... B 120 .....B 121 .... D 122 .....C 123 .... D 124 ....C 125 ...C 126..... A 127 .....D
128.... C

www.tnpscquestionpapers.com

129. மரபுப் பிழை நீக்கிய சொல்லை எழுதுக:
A) காட்டில் உள்ள யானை பிளிறியது
B) காட்டில் உள்ள யானை கத்தியது
C) காட்டில் உள்ள யானை கழறியது
D) காட்டில் உள்ள யானை கூவும்

130. பிறமொழிச் சொற்கள் நீக்கிய சொல்லை எழுதுக:
A) பெரியவர் கூறிய சங்கதியைக் கூறு
B) பெரியவர் கூறிய சொற்களைக் கூறு
C) பெரியவர் கூறிய சமாச்சாரத்தைக் கூறு
D) பெரியவர் கூறிய செய்தியைக் கூறு

131. "குட் பாய்" – என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லை அறிக:
A) கோபக்காரன் B) விளையாட்டுப் பையன்
C) கெட்ட பையன் D) நல்ல பையன்

132. "பேக்கிங் சார்ஜ்" – என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லை அறிக:
A) கட்டுமானக் கூலி B) பதிவு வரி
C) பேக்கிங் கூலி D) கட்டுமானத் தொகை

133. "Balanced Diet" –என்ற ஆங்கிலச் சொல்லுக்கு சரியான தமிழ்ச்சொல் தேர்க:
A) சமச்சீர் உணவு B) சரியான உணவு
C) நல்ல உணவு D) ஆரோக்கிய உணவு

134. "ஐடியன்டிபிகேஷன் சர்டிபிகேட்" –என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல் கூறுக:
A) ஆளறி மனு B) அடையாள அட்டை
C) ஆளறி சான்றிதழ் D) அடையாளச் சீட்டு

135. பிறமொழிச் சொற்கள் நீக்கிய சொல்லை எழுதுக.
A) அவன் தினமும் மார்க்கெட்டுக்குப் போகின்றான்
B) அவன் தினமும் அங்காடிக்குப் போகின்றான்
C) அவன் தினமும் கடைக்குப் போகின்றான்
D) அவன் தினமும் கடைத்தெருவுக்குப் போகின்றான்

136. சீரிய, சீறிய என்பனவற்றின் ஒலி வேறுபாடறிந்து சரியான பொருள் கூறுக
A) மேலான, கோபித்த B) காலம், உணர்வு
C) கல், தழை D) வீரம், மரம்

137. அறம், அரம் என்பனவற்றின் ஒலி வேறுபாடறிந்து சரியான பொருள் கூறுக:
A) தருதல், தேடுதல் B) தருமம், கருவி
C) செய்தல், பார்த்தல் D) கூடுதல், பயத்தல்

138. மறம், மரம் என்பனவற்றின் ஒலி வேறுபாடறிந்து சரியான பொருள் கூறுக:
A) கொடு, கெடு B) வீரம், தாவரம்
C) தானம், மாடு D) தனம், தேடு

139. கரி, கறி என்பனவற்றின் ஒலி வேறுபாடறிந்து சரியான பொருள் கூறுக
A) சான்று, உணவு B) யானை, காய்கறி
C) கருமை, சமையல் D) எரிபொருள், குறை

140. விளை, விழை என்பனவற்றின் ஒலிவேறுபாடறிந்து சரியான பொருள் கூறுக
A) பயன், நட்பு B) உண்டாக்கு, விரும்பு
C) பழம், பள்ளம் D) விளைச்சல், புணர்ச்சி

141. "கோ" – ஓரெழுத்து ஒரு மொழிக்குரிய பொருள் தேர்க:
A) போனான் B) அரசன்
C) எழுத்து D) கோவில்

142. "ஏ" – ஓரெழுத்து ஒரு மொழிக்குரிய பொருள் தேர்க:
A) வாள் B) வேல் C) அம்பு D) கம்பு

143. "வீ" – ஓரெழுத்து ஒரு மொழிக்குரிய பொருள் தேர்க:
A) மணம் B) வாசனை
C) மலர் D) வாடுதல்

144. "கா" – ஓரெழுத்து ஒரு மொழிக்குரிய பொருள் தேர்க:
A) காடு B) காகம் C) சோலை D) காசு

145. "நொ" – ஓரெழுத்து ஒரு மொழிக்குரிய பொருள் தேர்க:
A) களைப்பு B) துன்பப்படு
C) ஆர்வம் D) சோம்பல்

146. "பருகுவான்" – இச்சொல்லின் வேர்ச்சொல்லைக் கண்டறிக:
A) பருகுவ B) பவான் C) பருகு D) பார்

147. "பார்த்தார்" – இச்சொல்லின் வேர்ச்சொல்லைக் கண்டறிக:
A) பார்த் B) பார்த்த C) பார்த்து D) பார்

148. "வனைந்தான்" – இச்சொல்லின் வேர்ச்சொல்லைக் கண்டறிக:
A) வனை B) வனைந்து
C) வனைந்த D) வனைந்தது

149. 'துயின்றாள்' எனும் சொல்லின் வேர்ச்சொல் அறிக:
A) துயில் B) துயின் C) துயின்ற D) துயிலும்

150. 'பிழைத்தேன்' எனும் சொல்லின் வேர்ச்சொல் காண்க:
A) பிழைத்து B) பிழைத்த
C) பிழை D) பிழைந்த

151. 'உண்' என்னும் வேர்ச்சொல்லை வினைமுற்றாக மாற்றுக:
A) உண்ண B) உண்னு
C) உண்டான் D) உண்ணல்

152. 'பார்' என்னும் வேர்ச்சொல்லை வினைமுற்றாக மாற்றுக:
A) பார்த்த B) பார்த்தான்
C) பார்க்கும் D) பார்க்க

153. 'கடி' என்னும் வேர்ச்சொல்லை வினையெச்சமாக மாற்றுக:
A) கடி B) கடித்து
C) கடித்த D) கடித்தல்

154. 'வெல்' என்னும் வேர்ச்சொல்லை வினையாலணையும் பெயராக மாற்றுக:
A) வென்று B) வென்ற C) வெல்பவர் D) வென்றல்

155. 'கொடு' என்னும் வேர்ச்சொல்லைத் தொழிற்பெயராக மாற்றுக:
A) கொடுத்தல் B) கொடுத்து
C) கொடுத்த D) கொடுத்தான்

129.... A 130.... D 131 .... D 132 ..... D 133 ..... A 134 ..... C 135 .... D 136 ..... A 137 .... B 138 ... B 139 ..... B 140 ..... B
141 .... B 142 .... C 143 .... C 144 ..... C 145 ..... B 146 ..... C 147 .... D 148 ..... A 149 .... A 150 ... C 151 ..... C 152 ..... B
153 .... B 154 .... C 155 .... A

www.tnpscquestionpapers.com

156. அகர வரிசைப்படுத்திய வரிசையைக் கண்டறிக:
A) கீற்று, கூடை, கிளி, குட்டு, காற்று
B) காற்று, கிளி, கீற்று, குட்டு, கூடை
C) காற்று, குட்டு, கீற்று, கிளி, கூடை
D) குட்டு, கிளி, காற்று, கூடை, கீற்று

157. அகர வரிசைப்படுத்திய சொற்களைக் கண்டறிக:
A) மீன், மாங்காய், முத்து, மச்சம், மூதூர்
B) மச்சம், மாங்காய், மீன், முத்து, மூதூர்
C) முத்து, மாங்காய், மச்சம், மூதூர், மீன்
D) மாங்காய், மச்சம், முத்து, மீன், மூதூர்

158. அகர வரிசைப்படுத்திய சொற்களைக் கண்டறிக:
A) சீற்றம், சிறப்பு, சாலை, சனி
B) சனி, சாலை, சிறப்பு, சீற்றம்
C) சிறப்பு, சனி, சாலை, சீற்றம்
D) சாலை, சீற்றம், சனி, சிறப்பு

159. அகர வரிசைப்படுத்திய சொற்களைத் தேர்க:
A) தெய்வம், காட்சி, உழைப்பு, பேறு
B) காட்சி, உழைப்பு, தெய்வம், பேறு
C) உழைப்பு, பேறு, காட்சி, தெய்வம்
D) பேறு, காட்சி, உழைப்பு, தெய்வம்

160. அகர வரிசைப்படுத்திய சொற்களைத் தேர்க:
A) ஊதியம், உழைப்பு, கடமை, வெற்றி
B) கடமை, உழைப்பு, ஊதியம், வெற்றி
C) ஊதியம்; கடமை, வெற்றி, உழைப்பு
D) உழைப்பு, ஊதியம், கடமை, வெற்றி

161. சொற்களை ஒழுங்குபடுத்திய சொற்றொடரை எழுதுக:
A) அறம் வாழ்விற்குச் சிறப்பையும் செல்வத்தையும் தரும்
B) வாழ்வுக்குச் செல்வத்தையும் அறம் சிறப்பையும் தரும்
C) அறம் செல்வத்தையும் வாழ்வுக்குச் சிறப்பையும் தரும்
D) அறம் சிறப்பையும் வாழ்வுக்குச் செல்வத்தையும் தரும்

162. சொற்களை ஒழுங்குபடுத்திய சொற்றொடரை எழுதுக:
A) வீதிவரை உறவு வீடுவரை மனைவி
B) வீடுவரை உறவு வீதிவரை மனைவி
C) உறவு வீதிவரை மனைவி வீடுவரை
D) மனைவி வீடுவரை உறவு வீதிவரை

163. சொற்களை ஒழுங்குபடுத்திய சொற்றொடரை எழுதுக:
A) கட்டினான் கல்லணையைக் கரிகாலன்
B) கல்லணையைக் கரிகாலன் கட்டினான்
C) கல்லணை கரிகாலனால் கட்டப்பட்டது
D) கரிகாலன் கல்லணையைக் கட்டினான்.

164. சொற்களை ஒழுங்குபடுத்திய சொற்றொடரை எழுதுக:
A) தீதும் பிறர்தர வாரா நன்றும்
B) நன்றும் பிறர்தர வாரா தீது
C) தீதும் நன்றும் பிறர்தர வாரா
D) பிறர்தர வாரா தீதும் நன்றும்

165. சொற்களை ஒழுங்குபடுத்திய சொற்றொடரை எழுதுக:
A) நாலும் சொல்லுக்கும் இரண்டும் உறுதி
B) இரண்டும் நாலும் சொல்லுக்கு உறுதி
C) சொல்லுக்கு உறுதி இரண்டும் நாலும்
D) நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி

166. 'மறைமலை நகர்' – பெயர்ச்சொல்லின் வகையறிக :
A) காலப்பெயர்
B) இடப்பெயர்
C) குணப்பெயர்
D) பொருட்பெயர்

167. 'சித்திரை' – பெயர்ச்சொல்லின் வகையறிக :
A) பொருட்பெயர்
B) தொழிற்பெயர்
C) பண்புப்பெயர்
D) காலப்பெயர்

168. 'இனிமை' – பெயர்ச்சொல்லின் வகையறிக :
A) தொழிற்பெயர்
B) பண்புப்பெயர்
C) இடப்பெயர்
D) பொருட்பெயர்

169. "பாடுதல்" பெயர்ச்சொல்லின் வகையறிக:
A) தொழிற்பெயர்
B) சினைப்பெயர்
C) காலப்பெயர்
D) பண்புப்பெயர்

170. "கை" பெயர்ச்சொல்லின் வகையறிக:
A) பொருட்பெயர்
B) காலபெயர்
C) சினைப்பெயர்
D) பண்புப்பெயர்

171. "பாலும் பழமும்" இலக்கணக் குறிப்பு அறிக:
A) பண்புத்தொகை
B) உவமைத்தொகை
C) எண்ணும்மை
D) அன்மொழித்தொகை

172. "இராப்பகல்" இலக்கணக் குறிப்பு அறிக:
A) பண்புத்தொகை
B) வினைத்தொகை
C) உம்மைத்தொகை
D) வினையெச்சம்

173. "உவகைத்தேன்" இலக்கணக் குறிப்பு அறிக:
A) உவமைத்தொகை
B) வேற்றுமைத்தொகை
C) உருவகம்
D) பண்புப்பெயர்

174. "வினைப்பயன்" இலக்கணக் குறிப்பு அறிக:
A) ஆறாம் வேற்றுமைத்தொகை
B) வினைத்தொகை
C) எண்ணும்மை
D) தொழிற்பெயர்

175. 'செவ்வேள்' இலக்கணக் குறிப்பு அறிக:
A) வினைத்தொகை
B) தொழிற்பெயர்
C) பண்புத்தொகை
D) உவமைத்தொகை

176. "பாரதிதாசனின் இயற்பெயர் கனக சுப்புரத்தினம் என்பதாகும்" – விடைக்கேற்ற வினாவைத் தேர்க:
A) கனக சுப்புரத்தினம் யார்?
B) பாரதிதாசனின் இயற்பெயர் யாது?
C) பாரதிதாசனை எவ்வாறு அழைத்தனர்?
D) சுப்புரத்தினத்தை எவ்வாறு அழைத்தனர்?

177. "திருக்குறள் சிறந்த நீதி நூல்" விடைக்கேற்ற வினாவைத் தேர்க:
A) திருக்குறள் நீதி நூலா?
B) திருக்குறள் எந்நூல்?
C) திருக்குறள் சிந்த நூலா?
D) எது சிறந்த நீதி நூல்?

178. "முயற்சி திருவினையாக்கும்" விடைக்கேற்ற வினாவைத் தேர்க:
A) முயற்சியால் என்ன கிடைக்கும்?
B) முயற்சி ஏன் செய்ய வேண்டும்?
C) முயற்சி செய்தது ஏன்?
D) முயற்சியின் பயன் யாது?

156.... B 157.... B 158.... B 159..... C 160..... D 161..... A 162..... B 163.... D 164.... C 165... D 166..... B 167..... D
168.... B 169.... A 170.... C 171..... C 172..... C 173.... D 174..... A 175..... C 176.... B 177... D 178..... D

www.tnpscquestionpapers.com

www.tnpscquestionpapers.com

179. "ஆலும் வேலும் பல்லுக்குறுதி" விடைக்கேற்ற வினா தேர்க:
A) எது பல்லுக்குறுதி?
B) பல்லுக்குறுதி எது?
C) ஆலும் வேலும் பல்லுக்குறுதியா?
D) எவை பல்லுக்குறுதி?

180. "கடும் உழைப்பும் ஊக்கமும் இருந்தால் அனைவரும் வாழ்வில் உயரலாம்" விடைக்கேற்ற வினா தேர்க:
A) வாழ்வில் எவர் உயர்வர்?
B) வாழ்வில் உயர எவை தேவை?
C) ஊக்கம் மட்டும் உயர்வதற்குப் போதுமா?
D) அனைவரும் வாழ்வில் உயர எவை வேண்டும்?

181. "பொன்னி இன்னிசைப் பாடினாள்" எவ்வகை வாக்கியம் எனக் கண்டறிக:
A) செய்தி வாக்கியம் B) கட்டளை வாக்கியம்
C) உணர்ச்சி வாக்கியம் D) வினா வாக்கியம்

182. 'வீரர்கள் போர் புரிய வேண்டும்' எவ்வகை வாக்கியம் எனக் கண்டறிக:
A) வினா வாக்கியம் B) கட்டளை வாக்கியம்
C) செய்தி வாக்கியம் D) உணர்ச்சி வாக்கியம்

183. "யாருக்குப் பரிசு வழங்கினார்கள்" எவ்வகை வாக்கியம் எனக் கூறுக:
A) கட்டளை வாக்கியம் B) வினா வாக்கியம்
C) செய்தி வாக்கியம் D) உணர்ச்சி வாக்கியம்

184. "முழுமதியின் அழகுதான் என்னே!" எவ்வகை வாக்கியம் ?
A) செய்தி வாக்கியம் B) உணர்ச்சி வாக்கியம்
C) கட்டளை வாக்கியம் D) செய்வினை வாக்கியம்

185. "வாழ்க்கை இன்ப துன்பம் கலந்தது என்பது அனைவரும் அறிந்தது" எவ்வகை வாக்கியம்?
A) தனிவாக்கியம் B) கலவை வாக்கியம்
C) தொடர் வாக்கியம் D) உணர்ச்சி வாக்கியம்

186. "பாரதியார் என்றென்றும் நிலைத்து நிற்கும் இலக்கியங் களைப் பாடியுள்ளார்" எவ்வகை வாக்கியம்?
A) பிறவினை B) செயப்பாட்டு வினை
C) செய்வினை D) கட்டளை வாக்கியம்

187. தாய் குழந்தைக்குச் சொற்களைக் கற்பித்தாள்– வாக்கிய அமைப்புச் சுட்டுக
A) பிறவினை B) தன்வினை
C) செயப்பாட்டு வினை D) கலவை வாக்கியம்

188. "கயல்விழி திருக்குறள் பயின்றாள்" எவ்வகை வாக்கியம்?
A) பிறவினை B) தன்வினை
C) செயப்பாட்டு வினை D) கட்டளை

189. "உழவனால் நெற்பயிர் வளர்க்கப்பட்டது" எவ்வகை வாக்கியம்?
A) செய்வினை B) செயப்பாட்டு வினை
C) பிறவினை D) தொடர் வாக்கியம்

190. "மூவர் தேவாரத்தை இயற்றினர்" வாக்கிய அமைப்பு சுட்டுக:
A) செயப்பாட்டு வினை B) பிறவினை
C) செய்வினை D) விழைவு வாக்கியம்

191. "தாயைக் கண்ட சேயைப் போல்" – இவ்வுவமையால் விளக்கப்படும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெடுத்து எழுதுக:
A) மகிழ்ச்சி B) துன்பம்
C) கலக்கம் D) மயக்கம்

192. 'இலைமறை காய் போல்' – இவ்வுமையால் அறியப்படும் பொருள் யாது?
A) வேதம் B) நெருக்கம்
C) மறைபொருள் D) வெளிப்படை

193. "மழைமுகம் காணாப் பயிர் போல" – இவ்வுமையால் அறியப்படும் பொருள் யாது?
A) மகிழ்ச்சி B) பெருமை
C) வீழ்ச்சி D) வாட்டம்

194. "விழலுக்கு இறைத்த நீர் போல்" – உவமைப் பொருளைக் கூறுக:
A) சரியானது B) பயனற்றது
C) பயனுள்ளது D) போதுமானது

195. "சர்க்கரைப் பந்தலில் தேன்மழை பொழிந்தது போல" – உவமைப் பொருளைக் கூறுக:
A) மிக்க மகிழ்வு B) மகிழ்வு
C) ஆர்வம் D) புன்னகை

196. "இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு இடும்பை படாஅ தவர்" – இதில் அமைந்துள்ள மோனையை எழுதுக.
A) இடும்பைக்கு–படுப்பர் B) இடும்பைக்கு–படாஅ
C) இடும்பைக்கு–இடும்பை D) இடும்பைக்கு–தவர்

197. "தன்னைத்தான் காக்கின் சினம்காக்க காவாக்கால் தன்னையே கொல்லும் சினம்" – இதில் அமைந்துள்ள மோனையை எழுதுக.
A) தன்னைத்தான்–காக்கின்
B) தன்னையே–காக்கின்
C) சினம் காக்க– காவாக்கால்
D) தன்னைத்தான்–தன்னையே

198. "பிறர்தன்னைப் பேணுங்கால் நாணலும் பேணார் திறன்வேறு கூறிற் பொறையும் அறவினை" – இதில் அமைந்துள்ள சீர்எதுகையைத் தேர்க.
A) பிறர்தன்னை–திறன்வேறு B) பேணுங்கால்–பேணார்
C) திறன்வேறு–பொறையும் D) திறன்வேறு–அறவினை

199. "நாணகத் தில்லார் இயக்கம் மரப்பாவை நாணால் உயிர் மருட்டி யற்று" – இதில் அமைந்துள்ள எதுகையினைக் கண்டறிக.
A) நாணகத்–இயக்கம் B) இயக்கம்–மரப்பாவை
C) உயிர்–மருட்டி D) நாணகத்–நாணால்

200. பின்வரும் தொடரில் உள்ள இயைபுத் தொடையை எடுத்துக்காட்டுக
"மடுக்கும் குழற்கா டேந்துமிள வஞ்சிக் கொடியே வருகவே!
மலயத் துவசன் பெற்றபெரு வாழ்வே வருக! வருகவே!"
A) மடுக்கும்–வஞ்சிக்கொடியே
B) வருகவே–வருகவே
C) மலயத் துவசன்–பெற்றபெரு வாழ்வே
D) குழற்காடேந்தும்–இளவஞ்சி

179.... D 180.... D 181.... A 182..... B 183..... B 184..... B 185..... B 186..... C 187.... A 188... B 189..... B 190..... C
191.... A 192.... C 193.... D 194..... B 195..... A 196..... C 197.... D 198..... A 199... D 200... B

www.tnpscquestionpapers.com


# விளக்கமான விடைகள்

2. (B)
$p=1/f = p\times f = 1$
$p=0.04,\ f=25$ cm
$0.04\times 25 = 1.00$ விடை சரிபார்க்கப்பட்டது.
எனவே, விடை 0.04D ஆகும்.

91. (B)

$$\begin{aligned} a:b &= 5:9 \\ b:c &= 4:7 \\ a:b:c &= 4\times 5 : 4\times 9 : 9\times 4 : 9\times 7 \\ &= 20:36 \\ &\quad\ 36:63 \\ &= 20:36:63 \end{aligned}$$

92. (A)



ஒரு வட்டத்தின் மையப்புள்ளியில் இருந்து, அதன் ஒரு நாணுக்கு வரையப்படும் செங்குத்துக் கோடு அதனை இரு சம பகுதிகளாக பிரிக்கும்.

93. (B)
ஒரு வட்ட நாற்கரத்தின் கோணம் மற்றும் அதன் எதிர் கோணத்தின் கூடுதல் 180° ஆகும்.

$$\begin{aligned} \text{கோணம்+எதிர்கோணம்} &= 180^\circ \\ 70^\circ\text{+எதிர்கோணம்} &= 180^\circ \\ \text{எதிர்கோணம்} &= 180-70 \\ &= 110^\circ \end{aligned}$$

94. (C)

$$\begin{aligned} \text{திட்ட விலக்கம் } (\sigma) &= 21.2 \\ \text{சராசரி } (\bar{x}) &= 36.2 \\ \text{மாறுபாட்டு கெழு} &= \frac{\text{திட்ட விலக்கம்}}{\text{கூட்டு சராசரி}}\times 100 \\ &= \frac{\sigma}{\bar{x}}\times 100 \\ &= \frac{21.2}{36.6}\times 100 \\ &= 57.92\% \end{aligned}$$

95. (C)

$$\begin{aligned} \tan 45^\circ &= \frac{\sin 45^\circ}{\cos 45^\circ} \\ \sin 45^\circ &= \frac{1}{\sqrt{2}}\ ;\ \cos 45^\circ = \frac{1}{\sqrt{2}} \\ \tan 45^\circ &= \frac{1/\sqrt{2}}{1/\sqrt{2}} \\ &= \frac{1}{\sqrt{2}}\times\frac{\sqrt{2}}{1} = 1 \\ 1-\tan 45^\circ &= 1-1 = 0 \end{aligned}$$

96. (C)
y அச்சுக்கு இணையான நேர்கோட்டின் சமன்பாடு $x = c$ ஆகும்.

97. (B)
21, 42, 63...........என்ற தொடரினை
1×21, 2×21, 3×21..........என்றும் எழுதலாம்

$\therefore \frac{420}{21} = 20$

∴ 420 என்பது 20வது உறுப்பு

98. (B)
$\frac{2}{5} = 0.4\ ;\ \frac{3}{7} = 0.43\ ;\ \frac{4}{11} = 0.36\ ;\ \frac{3}{8} = 0.38$

இவற்றுள் $\frac{3}{7} = 0.43$ தான் பெரிய மதிப்பாகும்.

99. (B)

$$\begin{aligned} 2x+ky+1 &= 0 \\ 2(1)+k(1)+1 &= 0 \\ 2+k+1 &= 0 \\ 3+k &= 0 \\ k &= -3 \end{aligned}$$

100. (C)

$$\left(\frac{mx_2+nx_1}{m+n}\right),\left(\frac{my_2+ny_1}{m+n}\right)$$

$$\begin{aligned} x_1, y_1 &= (-1, 2) \\ x_2, y_2 &= (4, -5) \\ m:n &= 2:3 \\ &= \left(\frac{2\times 4+3\times(-1)}{2+3}, \frac{2\times(-5)+3\times 2}{2+3}\right) \\ &= \left(\frac{8-3}{5}, \frac{-10+6}{5}\right) = \left(\frac{5}{5}, \frac{-4}{5}\right) \\ &= \left(1, \frac{-4}{5}\right) \end{aligned}$$

www.tnpscquestionpapers.com